# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் ஏப்ரல் திங்கள் 25–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண் : 1**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். G4/2239/08 நாள் 3.2008–ல் வெள்ள நிவாரணப் பணி திட்டத்தின்கீழ் குளச்சல் துறைமுகத் தெருவில் பழுதடைந்த தார் சாலைகளை செப்பனிடுவதற்கு ரூ.3.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.521**. பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சிக்கு 12–வது நிதிக்குழு பரிந்துரை திட்டம் 2006–2007–ன்கீழ் ரூ.25,26,884/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 50% அதாவது ரூ.12,63,442/– திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனி பகுதியில் மண்புழு உரம் தயாரிப்பதற்கு சுற்று சுவர் கட்டும் பணிக்கு 6.10 லட்சமும், மண்புழு உரம் தயாரிக்கும் பணிக்கு கட்டமைப்பு ஏற்படுத்திட 6.65 லட்சமும் (நகர்மன்ற தீர்மானம் எண். 186 நாள் 20.04.2007–ன்படி) செலவு செய்திட தீர்மானிக்கப்பட்டது. இதில் சுற்று சுவர் கட்டும் பணிக்கு ரூ. 5,10,722/– செலவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி பகுதியில் ஆடறுக்கும் மனை கட்டப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண். 60372/2007/P4-1 நாள் 31.10.2007–ல் தெரிவிக்கப்பட்டதின் காரணமாக மீதமுள்ள பணிகள் செய்யாமல் நிறுத்தப்பட்டன. எனவே மேற்படி ரூ.12,63,442/–ல் ரூ.5,10,722/– செலவு செய்தது போக மீதமுள்ள தொகையான ரூ. 7,52,720/– னை தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உப்பளம் பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்காக செலவு செய்திடவும், ஏற்கெனவே மண்புழு உரம் தயாரிப்பதற்கு கட்டமைப்புகள் ஏற்படுத்துவதற்கென மேற்கொண்ட பணியினை ரத்து செய்திடவும், மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.522**. அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 3**

குளச்சல் நகராட்சி குடிநீர் பிரிவில் 13 போர்வெல்களும், 9 குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளும், 15 மோட்டார்களும் உள்ளன. தினமும் 13 போர்வெல்களிலிருந்து 14 மோட்டார்கள் மூலம் 9 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கும் தண்ணீர் ஏற்றப்பட்டு 20 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக கீழ்க்கண்ட விபரப்படியான மோட்டார்கள் மற்றும் G.I. பைப்புகளில் பழுதுகள் ஏற்பட்டுள்ளன. அவை

(1) சீம்பிளிவிளை பகுதியில் போர்வெல் எண்.3–ன் அருகாமையில் 12 மீட்டர் பைப்லைன்கள் பழுதடைந்துள்ளது.
(2) V.K.P. School பக்கம் போர்வெல் எண். 11–ன் அருகாமையில் பைப்லைன் பழுதடைந்துள்ளது.
(3) பாலத்தன்கரை சம்பு பக்கம் உள்ள கிணற்றில் தண்ணீர் குறைவாக உந்தப்படுவதால் மேற்படி கிணற்றிலுள்ள மோட்டாரினை கழற்றி சரிபார்த்தல் வேண்டும்.
(4) போர்வெல் எண். 7–ல் அமைக்கப்பட்டுள்ள 7.5 எச்.பி. மின்மோட்டாரை மாற்றி 5 எச்.பி. மோட்டார் பொருத்த வேண்டும்.
(5) சீம்பிளிவிளையில் உள்ள போர்வெல் எண். 12–ல் உள்ள மோட்டார் குறைவாக தண்ணீர் தள்ளுவதால் மோட்டாரினை கழற்றி பழுது பார்க்க வேண்டும்.
(6) பர்னட்டிவிளை திருப்பில் உள்ள மோட்டார் பழுதடைந்துள்ளதை சரி செய்ய வேண்டும்.
(7) பாலத்தன்கரை சம்பில் உள்ள 12 1/2 எச்.பி.மோட்டார் பைப் ஒடிந்து விழுந்து விட்டதை சரி செய்தல்.

(8) போர்வெல் எண். 8—ல் உள்ள பம்பில் ஓட்டை விழுந்துள்ளதால் அதனை சரி செய்ய வேண்டும். மேலும் பைப்பிலுள்ள ஓட்டையும் சரி செய்தல்.

(9) போர்வெல் எண். 10—ல் உள்ள பைப்பில் ஓட்டை விழுந்துள்ளதை சரி செய்தல்.

மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.62,000/— மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.523.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 4**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை மற்றும் பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலைய பஸ் பீஸ் வசூலிக்கும் உரிமம் கடந்த 31.03.2008 அன்று நான்காவது முறையாக மறு ஏலம் விடப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக்கேள்வி விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ. எண். | குத்தகை இனம் | உயர்ந்த ஏலக் கேள்வித் தொகை ரூ. | சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ. | மூன்றுறாண்டு சராசரி தொகை ரூ. | உயர்ந்த ஏலக் கேள்விதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 4,43,000/— | 5,00,000/— | 4,42,900/— | திரு.சி..லெனின் குமார் |
| 2 | பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏலக்கேள்வி எழவில்லை. | | | |

**அ.குறிப்பு :** (1) மேற்படி தினசரி சந்தையினுள் புதிதாக கட்டப்பட்ட வணிக வளாகத்திற்காக 17 ஸ்டால்கள் (கடைகள்) மாற்றம் செய்யப்பட்டதால் அதன்பேரில் கிடைக்கப்பெற்ற வருமானம் குத்தகைதாரருக்கு கிடைக்கப் பெறாததால் பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டதாக குத்தகைதாரர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் மூன்று முறை ஏலம் விடப்பட்டும் எவரும் ஏலம் எடுக்க முன்வராத நிலையில் நான்காவது முறையாக கேட்கப்பட்ட மறு ஏலக்கேள்வி மூன்றாண்டைய சராசரியைவிட (ரூ.4,42,900) அதிகமாக இருப்பதாலும், உயர்ந்த ஏலக்கேள்வியை ஒப்புக் கொள்ளலாம்.

(2) அவசர அவசியத்தின்பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியை உறுதிபடுத்தியதையும், 01.04.2008 முதல் உரிமத்தினை அனுபவித்துக் கொள்ள உரிம உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.524.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 5**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் தொடர்பாக கடந்த 09.04.2008 அன்று ஐந்தாவது முறையாக மறு ஏலம் விடப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ. எண். | குத்தகை விபரம் | உயர்ந்த ஏலக் கேள்வி | சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ. | உயர்ந்த ஏலக் கேள்விதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தில் கட்டண வசூலிக்கும் உரிமம். | ரூ. 1,65,500/— | 1.71,870/— | திரு.எஸ்.முருகன் |

**அ.குறிப்பு:** மேற்படி பேருந்து நிலைய கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 31.03.2008 முடிய நான்கு முறை பொது ஏலம் விடப்பட்டும் யாரும் ஏலம் கேட்க முன்வராததால் மேற்படி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 01.04.2008 முதல் அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், 09.04.2008 முதல் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.6,632/— இத்துடன் திரு.எஸ்.முருகன் என்பவரால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி

ரூ.1,65,500/— சேர்த்து ரூ. 1,72,132/— ஆகிறது. இது கடந்த ஆண்டைவிட கூடுதலாக உள்ளது. மேலும் துறையின் மூலம் வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லை. அத்துடன் பண்டிகை நாட்கள், மற்றும் எதிர்பாராத விதத்தில் வேலை நிறுத்தம் ஏற்பட்டாலோ, துறையின் மூலம் வசூல் பாதிப்படைய வாய்ப்புள்ளது. இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் மன்ற ஒப்புதல் பெற காலதாமதம் ஏற்பட்டால் ஏலம் எடுத்தவர் அதை மறுக்கவும் வாய்ப்பு உள்ளதால், அவசர அவசியத்தினை கருதி, மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உரிமம் உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.525.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 6**

குளச்சல் நகராட்சியில் 7—வது வார்டில் உள்ள க.எண். 8/62 எண் கொண்ட கட்டிடத்தில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பை (கு.இ.எண்.1036) மனுதாரர் நிரந்தரமாக துண்டிப்பு செய்ய கோரி உள்ளார். எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று க.எண். 8/62—ல் உள்ள குடிநீர் இணைப்பை துண்டிக்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.526.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 7**

குளச்சல் நகராட்சியில் 7—வது வார்டில் உள்ள க.எண். 9/27 எண் கொண்ட கட்டிடத்தில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பை (கு.இ.எண்.1015) மனுதாரர் தற்காலிகமாக துண்டிப்பு செய்ய கோரி உள்ளார். எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று க.எண். 9/27—ல் உள்ள குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிக்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.527.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 8**

SJSRY திட்டத்தின்கீழ் இயங்கும் லெட்சுமி மகளீர் குழு கடந்த 31.07.2007 அன்றுடன் தாங்கள் நடத்தி வந்த நகராட்சிக்கு சொந்தமான கடையினை (SJSRY திட்டத்தில் அண்ணாசிலை அருகாமையில் அமைந்துள்ளது) திருப்பி ஒப்படைத்துள்ளார்கள். எனவே மேற்படி குழு மூலம் செலுத்தப்பட்ட முன்பணத் தொகை ரூ.1000/— னை திருமதி.லெட்சுமி என்பவருக்கு திரும்ப வழங்கவும், 8/2007 முதல் மேற்படி கடையின் வாடகை கேட்பினை கணனியில் நிறுத்தி வைக்கவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.528.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 9**

நகர்மன்றத் தீர்மான எண். 421 நாள் 29.02.2008—ல் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக (பழைய மீன்சந்தை பகுதியில்) மேற்கூரை அமைக்கவும், அந்த சுவரினை கட்டுவதற்கும் ரூ. 2.60 லட்சத்திற்கான மதிப்பீட்டினை அங்கீகரித்துள்ளது. எனவே 18.03.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.T,இராதாகிருஷ்ணன், ஒப்பந்தக்காரர் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு ( ரூ. 2,57,302/—) |
| 2. | திரு.P.ஆராக்கியதாஸ் ஒப்பந்தக்காரர் | 6.37% மதிப்பீட்டை விட அதிகம் ( ரூ. 2,73,840/—) |

இதில் திரு.T.இராதாகிருஷ்ணன் என்பவர் 0.05% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.T.இராதாகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.529.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 10**

நகர்மன்றத் தீர்மான எண். 483 நாள் 29.02.2008—ல் குடிநீர் பிரிவில் பழுதடைந்த மோட்டார்களை சரி செய்வதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 78,500/— னை அங்கீகரித்துள்ளது. எனவே 18.03.2008—அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.P,தங்கமணி, ஒப்பந்தக்காரர் | 3.14% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 80,450/–) |
| 2. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தக்காரர் | 0.08% மதிப்பீட்டை விட குறைவு (ரூ. 77,932/–) |

இதில் திரு.C.சந்திரசேகர், என்பவர் 0.08% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :**குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.530.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 11**

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு. செல்லத்துரை 2000–2001 பந்தவிளை சாலையில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி செய்ததில் வைப்பு தொகை ரு. 4950/– பில்லில் பிடித்தம் செய்யப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ளது. மேலும் இப்பணி தொடர்பாக தணிக்கை தடை ஏதும் இல்லை. எனவே மேற்படி தொகையினை திரு. செல்லத்துரை ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டடப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.531.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் ஏப்ரல் திங்கள் 25–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண். 1**

**நகராட்சி ஆணையர் கொண்டுவரும் தீர்மானம் :**

1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 85–ன்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சொத்துவரி பொதுச் சீராய்வு செய்யப்பட வேண்டும் என்பது சட்டப்பூர்வமான ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் நகர வளர்ச்சி, பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர பராமரிப்பு செலவினங்கள் அதிகமாகிக் கொண்டே செல்லும் நிலையில் நகராட்சியின் சொத்துவரி மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் கடந்த 10 ஆண்டுகளாக செலவினங்களை ஏற்கும் வகையில் உயரவில்லை.

இந்நகராட்சியின் சொத்துவரி ஆண்டு வசூல் ரூ.32 இலட்சம் மட்டுமே ஆகும். இதில் நூலக ஆணைக் குழுவிற்கு ரூ. 18 இலட்சமும், நில அளவை துறைக்கு ரூ. 20 இலட்சமும், மின்வாரியத்திற்கு ரூ.40 இலட்சமும், சேமநல நிதிக்கு ரூ.25 இலட்சமும் செலுத்த வேண்டியுள்ளது. மேலும் வருவாய் நிதியின் வருமானத்தை கொண்டு பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், மாதாந்திர மின்கட்டணம், கடன் தவணைகள், பணியாளர் ஊதியம் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் செலவிடப்பட வேண்டும்.

இந்நகராட்சியின் 2008–09–ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின்படி உத்தேச வரவு ரூ. 12,35,65,000/– ஆகும். உத்தேச செலவினம் ரூ. 12,55,27,000/– ஆகும். இந்நகராட்சியில் 01.04.2008 முதல் மேற்கொள்ளப்பட வேண்டிய சொத்துவரி பொதுச் சீராய்வு தவிர்க்கப்பட்டால் கூடுதலாக ரூ.25 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.35 இலட்சம் பற்றாக்குறை ஏற்பட நேரிடும்.

மேலும் TUFIDCO நிறுவனத்திற்கு ரூ. 18,90,080/– IUDP (Bus Stand Loan) ரூ.1,06,27,000/– : IDSMT திட்டத்தின்கீழ் ரூ. 1,48,00,000/– செலுத்த வேண்டியுள்ளது.

இது தவிர கூட்டுக்குடிநீர் திட்டத்திற்காக ரூ. 1.74 கோடி கடன் தொகை திரும்ப செலுத்தப்பட வேண்டியுள்ளது.

01.04.2008 முதல் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் அனைத்திற்கும் சொத்துவரி பொதுச் சீராய்வு செய்யப்பட வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது. அரசு உத்தரவிற்கு மாறாக தீர்மானம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இந்நகராட்சிக்கு கிடைக்க வேண்டிய பல்வேறு கடன்கள் மற்றும் மானியங்கள் நிறுத்தப்படக் கூடிய சூழ்நிலை உருவாகும். இதனால் நகராட்சியின் நிதி சுமை மிகவும் அதிகமாகும். இத்தகை சூழ்நிலையில் நகராட்சியின் வருமானத்தை உயர்த்தும் பொருட்டும், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தும் பொருட்டும் சட்டப்பூர்வமாகவும், அரசு உத்தரவின்படியும் தற்போது பொது சொத்துவரிச் சீராய்வு மிகவும் அவசியமாக செயல்படுத்திட வேண்டும் என்ற விபரம் நகர்மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றது.

எனவே அரசு வழிகாட்டுதலின்படி ஏற்கெனவே உள்ள வரிவிதிப்பு கட்டிடங்களில் சொந்த குடியிருப்பு மற்றும் வாடகை கட்டிடங்களுக்கு 25% வரி உயர்வும், தொழிற்சாலை கட்டிடங்களுக்கு 100% வரி உயர்வும், வணிக உபயோக கட்டிடங்களுக்கு 150% வரி உயர்வும், 01.04.2008 முதல் உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். அவ்வாறு வரி உயர்வு செய்யும்பொழுது அரசு வழிகாட்டுதலின்படி கட்டிடத் தேய்மானம் மற்றும் கட்டிடத்தின் வகைப்பாடு குறித்த தள்ளுபடியும் கணக்கில் எடுத்துக் கொண்டு அதன் அடிப்படையில் தான் வரி உயர்வு செய்யப்படும் என்பதும் மன்றத்தின் தகவலுக்கு தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கெனவே B Zone-க்கு ரூ. 2/– எனவும், A Zone-க்கு ரூ. 1/– எனவும் உள்ளதை கீழ்காணும் வகையில் ( ABC என :மூன்று மண்டலங்களாக பிரித்து வரி விதிப்பினை திருத்தியமைக்கலாம்.

A - இராஜாக்கமங்கலம் ரோடு, பீச்ரோடு, குளச்சல் பரசேரி ரோடு – 2 ரூ.15 காசுகள்
B - குளச்சல் – கருங்கல் ரோடு, முளகுமூடு ரோடு மற்றும் பள்ளி ரோடு – 1 ரூ. 05 காசுகள்
C - இதர குடியிருப்பு பகுதிகள் – 0.75 காசுகள்

(அல்லது)

ஏற்கெனவே A Zone மற்றும் B Zone ஐ கீழ்கண்ட வகையில் மாற்றியமைக்கலாம்.

A Zone : இராஜாக்கமங்கலம் ரோடு, பீச்ரோடு, குளச்சல் பரசேரி ரோடு,
கருங்கல் ரோடு, முளகுமூடு ரோடு மற்றும் பள்ளி ரோடு.

B Zone : இதர குடியிருப்பு பகுதிகள்

**தீர்மான எண்.532.** விரிவான விளக்கம் பெற்றிட ஆணையர் சபைக்கு வராததால் ஒத்திவைக்கப்பட்டது.

**பொருள் எண் : 2**

12–வது நிதிக்குழு பரிந்துரை திட்டம் 2007–08–ன்கீழ் இந்நகராட்சிக்கு ரூ. 9,18,944/– அனுமதிக்கப்பட்டது. இதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கென ரூ. 4,59,472/– ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இந்திரா காலனி பகுதியில் மண்புழு உரம் தயாரிக்கும் இடத்திலுள்ள குப்பைகளை அகற்றுவதற்கென ரூ.1,25,000/–ம், மற்றும் மண்புழு உரம் தயாரிக்கும் இடத்தில் Watchman shed மற்றும் Store room அமைக்க ரூ. 1,10,000/– என இரண்டு பணிகள் தேர்வு செய்யப்பட்டு குப்பைகள் அகற்றும் பணிக்கென பணி முடிவு பெற்று ரூ. 1,25,000/– செலவழிக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் நகராட்சி நிவாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 60372/2007/P4–1 நாள் 31.10.2007 மூலம் மேற்படி பகுதியில் Slaughter House (ஆடறுக்கும் மனை) கட்டப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதால் மீதமுள்ள பணிகள் செய்யாமல் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்வதற்கு நகராட்சி பகுதியை ஒட்டியுள்ள உப்பளத்தில் சர்வே எண். 204/10–ல் 10 ஏக்கர் நிலம் குமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் (ந.க.எண்.M3/54536/07 நாள் 28.02.2008) ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆகவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 4,59,472/–ல் செலவு செய்யப்பட்ட தொகையான ரூ. 1,25,000/– போக மீதமுள்ள தொகையினை (ரூ.3,34,472/–) மேற்கண்ட இடத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்வதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்போது பணி செய்யாமல் உள்ள மண்புழு உரம் தயாரிக்கும் இடத்தில் Watchman shed மற்றும் Store room கட்டும் பணியினை ரத்து செய்வதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.533.** அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 3**

குளச்சல் நகராட்சி எல்கைக்குள் அமைந்திருக்கும் குளச்சல் பிரதான சாலை, சாஸ்தாங்கரை பிரதான சாலை, பவுண்டரி ரோடு, பள்ளி ரோடு ஆகிய முக்கிய பிரதான சாலைகளில் பெரும்பாலான பகுதிகளில் மழைநீர் ஓடை இல்லாததால் மழை காலங்களில் ரோட்டில் தண்ணீர் தேங்கி வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வீடுகளுக்குள் தண்ணீர் செல்லும் அபாயம் உள்ளது. மேலும் இதனால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுகிறது. ஆகவே மழையினை கருத்தில் கொண்டு நகரின் முக்கிய சாலைகளில் நடைபாதையுடன் கூடிய மழைநீர் ஓடை கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்யுமாறு அறிவுறுத்தியதன் அடிப்படையில் கீழ்கண்ட இடங்களில் நடைபாதையுடன் கூடிய மழைநீர் ஓடை கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (1) | குளச்சல் பிரதான சாலையில் காந்தி சந்திப்பு முதல் வி.கே.பி. பள்ளி வரையில் சாலையின் தெற்கு பகுதியில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல். | : ரூ. 72.00 இலட்சம் |
| (2) | குளச்சல் பிரதான சாலையில் நகராட்சி அலுவலக வளாகம் முதல் வி.கே.பி. பள்ளி வரையில் சாலையின் வடக்கு பகுதியில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல். | : ரூ .58.00 “ |
| (3) | குளச்சல் பள்ளி ரோட்டில் மேற்கு பகுதியில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல். | : ரூ. 32.50 “ |
| (4) | பவுண்டரி ரோட்டில் வி.கேபி.பள்ளி முதல் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் வரையில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல். | : ரூ. 25.00 “ |
| (5) | சாஸ்தாங்கரை பிரதான சாலையில் கிழக்கு பகுதியில் குளச்சல் பிரதான சாலை முதல் வெள்ளியாகுளம் வரையில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல். | ரூ .58.00 “ |
| (6) | சாஸ்தாங்கரை பிரதான சாலை மேற்கு பகுதியில் குளச்சல் பிரதான சாலை சந்திப்பு முதல் வெள்ளியாகுளம் வரையில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் மூடியுடன் கூடிய வடிகால் அமைத்தல். | ரூ .58.50 “ |
| (7) | சாஸ்தாங்கரை பிரதான சாலை சந்திப்பிலிருந்து நரிக்கல் சந்திப்பு வரையிலான சாலையில் சிறுபாலம் மற்றும் சிமெண்ட் மூடியுடன் கூடிய வடிகால் அமைத்தல். : | ரூ. 32.50 “ |
| | மொத்தம் : | :ரு .336.50 லட்சம் |

மேற்கண்ட பணிகளை செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் வழியாக அரசிடம் நிதியுதவி பெறுவதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.534.** கூடுதலாக மேற்கு கடற்கரை சாலையில் குளச்சல் பீச் சந்திப்பிலிருந்து கொட்டில்பாடு வரையில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்திட மதிப்பீடு ரூ. 68.00 இலட்சம், காமராசர் சாலையில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்திட மதிப்பீடு ரூ. 28.00 இலட்சம் என்ற சேர்த்தலுடன் ஆக மொத்தம் ரூ. 432.5 இலட்சம் வெள்ள நிவாரணப் பணிகளுக்கான திட்டத்தில் கேட்டிட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 4**

நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் வால்வு, பேருந்து நிலைய மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் வால்வு, வி.கே.பி. மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் வால்வு ஆகியவை பழுதடைந்து உள்ளன. இதனால் நீர்தேக்க தொட்டியில் இருந்து குடிநீர் கசிந்து வீணாகிறது. மேலும் குளச்சல் மெயின் ரோடு பேருந்து நிலையம் அருகில் இலப்பவிளை, பள்ளிவிளாகத், பள்ளிரோடு, வெள்ளிப்பிள்ளையார் கோயில் தெரு மற்றும் கொட்டில்பாடு நீர்தேக்க தொட்டியின் வால்வுகளும் பழுதடைந்துள்ளதால் தண்ணீர் வீணாகிறது. ஆகவே அவற்றை மாற்றி புதிதாக அமைப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் பேருந்து நிலைய மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு வரும் பம்பிங் மெயின் மற்றும் பீச் மேல்நிலை நீர்தெக்க தொட்டிக்கு வரும் பம்பிங் மெயின் அடிக்கடி பழுது ஏற்படுவதால் அந்த பிரதான குழய்களில் Air valve அமைப்பதற்கும், மேலும் பள்ளிரோடு, பவுண்டரி ரோடு ஆகிய இடங்களில் பகிர்மான குழாய்களில் Air valve அமைப்பதற்கும், இவைகளுக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுதொகை ரூ. 90,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.535.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 5**

தமிழ்நாடு அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி துறை, சென்னை அவர்களின் கடித எண். 749/ச2/த2/2007 நாள் 09.06.2007 மற்றும் 29.06.2007–ல் தமிழரசு (தமிழ்) இதழில் அரசின் வளர்ச்சி திட்டங்கள் பற்றி அனைத்து தரப்பு மக்களும் எளிதில் அறிந்து பயன்படும் வகையில் சந்தாதாரர்கள் அதிக அளவில் சேர்க்க அரசு வலியுறுத்தியுள்ளது. அதனடிப்படையில் தமிழ் இதழுக்கான ஆயுள் சந்தா ரூ. 1000/– துணை இயக்குநர், (வெளியீடுகள்) தமிழரசு, சென்னை என்ற பெயரில் வங்கி வரைவோலையாக அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.536.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுக தெருவில் உள்ள பழைய மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் வால்வு பழுதடைந்துள்ளதால் குடிநீர் சரிவர விநியோகம் செய்ய இயலவில்லை. குடிநீரும் வீணாகிறது. மேலும் தொட்டியினை சுத்தம் செய்யும் ஜி.ஐ. பைப் மற்றும் வால்வு ஆகியவையும் பழுதடைந்துள்ளதால் தொட்டியினை சுத்தம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. மேலும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தில் வால்வு தொட்டியும் அமைத்து மேல்நிலைநீர்தேக்க தொட்டியினையும் மராமத்து செய்ய வேண்டியுள்ளது. அவற்றினை சரி செய்வதற்கும், அதற்காகும் மதிப்பீட்டு தொகை ரூ. 45,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.537.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 7**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை பொது ஏலத்தில் விடுவது தொடர்பான அறிவிப்பினை தினசரி பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திய வகையில் Bright Advertising, Chennai தினத்தந்தி (Ngl) மற்றும் Kal publications (P) Ltd, (Ngl) (தினகரன்) –க்கு முறையே ரூ.1917/– ரூ.2565/– மற்றும் ரூ.5040/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.538.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 8**

குளச்சல் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2007–08–ன்கீழ் வார்டு எண்.8 மரமடியில் ரூ. 2.00 லட்சம் மதிப்பீட்டிலான ஓய்வறை கட்டும் பணிக்கு அ.னுமதி அளித்ததின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.எஸ்.டேவிட்ராஜ் என்பவருக்கு 08.01.2008–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஓய்வறை கட்டும் பணியினை ஒப்பந்ததாரர் தொடங்க முயலும் போது அப்பகுதி மக்களால் அங்கு கட்ட விடாமல் தடுக்கப்பட்டது. அதன் பிறகு நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினரால் அப்பகுதி மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு பிரச்சனை சுமுகமாக தீர்க்கப்பட்டு பணியினை தொடங்குமாறு ஒப்பந்தததாரரிடம் அறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில் தற்போது கம்பி மற்றும் சிமெண்ட் போன்ற கட்டுமான பொருட்களின் கடுமையான விலையேற்றத்தினால் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள விலைவிகிதத்தில் செய்ய இயலாது எனவும் திருத்திய மதிப்பீட்டின்படி ஒப்பந்தம் செய்து தருமாறும் கடிதம் அளித்துள்ளார். தற்போது பொதுப்பணித் துறையின் 2008–09–ம் ஆண்டிற்கான விலைப்பட்டியல் பெறப்பட்டுள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்த பின் மறுஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : திரு.எஸ்.டேவிட்ராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்யலாம். மேலும் 2008–09 ஆண்டிற்கான விலை பட்டியல்படி மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரவும், கூடுதல் ஆகும் தொகையினை பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அளிக்குமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களை கேட்டுக் கொள்ளலாம்.

**தீர்மான எண்.539.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 9**

ஏப்ரல் 2008–ம் மாதத்திய சாதரணக்கூட்டம் மற்றும் அவசரக்கூட்டம் தொடர்பான மன்றப்பொருட்கள் Xerox எடுத்த வகையில் சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு ரூ.400/– வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.540.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 10**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் கடை எண். 10 மற்றும் 11 ஆகியவற்றின் இடைச்சுவரினை வியாபார அபிவிருத்திக்காக நீக்கம் செய்யக் கேட்டு குத்தகைதாரர் திரு.ஆர்.மோகன்லால் பாபு என்பவர் விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்படி இடைச்சுவரினை நீக்கம் செய்வதற்கும் அதற்கான செலவுத் தொகை ரூ. 8300/– (ரூபாய் எட்டாயிரத்து முன்னூறு மட்டும்) நகராட்சி கருவூலத்தில் செலுத்துவதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின்பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ரூ.8300/– ஐ கருவூலத்தில் செலுத்தியதையும், இடைச்சுவரினை நீக்கம் செய்ய உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.541.** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 11**

நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :

குமரி மாவட்டத்தின் நான்கு நகராட்சி நகரங்களில் குளச்சலும் ஒன்று. இது ஒரு இயற்கை வர்த்தக துறைமுகம். ரூ. 27 கோடியில் மீன்பிடித் துறைமுக வேலைகளும் விரைவில் துவக்கப்படவுள்ளன. மிகப்பெரிய அளவிலான சரக்குப்பெட்டக வசதியுடன் கூடிய வர்த்தக துறைமுகம் உலக தரத்தில் குளச்சலில் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை ( Detailed Project Report) தயாரிப்பதற்கு டெண்டர் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது வரலாற்று சிறப்புடன்கூடிய ஒரு புராதன நகரம். இந்நிலையில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் அலுவலகம் இந்நகரில் அமைக்கப்படாதது வேதனைக்குரிய செயல். எஞ்சிய மூன்று நகரங்களிலும் இவ்வலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. குளச்சல் நகரில் L.I.C.–ன் Satellite கிளை அலுவலகம் (Satellite Branch) அமைத்திட முதுநிலை கோட்ட மேலாளர், திருநெல்வேலி அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.542.** ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 12**
**நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :**

குளச்சல் நகராட்சி பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்திற்கு நுழைவு வாயில் அமைப்பதற்கு 5 காண்கிரீட் தூண்கள் கட்டப்பட்டது. தூண்கள் கட்டப்பட்டதற்கு பின்னால் தூண்களை இணைக்கும் ஆர்ச் கட்டுமான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மேற்படி ஆர்ச் முழுவதும் கட்டுமான பணியாளர்களுடன் சரிந்து கீழே விழுந்தது. ஆபத்தான நிலையில் கட்டுமானப் பணியாளர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தொங்கிக் கொண்டிருந்த ஆர்ச்சின் கட்டுமானங்கள் பொது மக்களுக்கும், பேருந்துகளுக்கும் பெருஞ்சேதத்தினை விளைவிக்காத வண்ணம் காவல் துறையினரால் பொக்கலின் இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தப்பட்டது. அவ்வாறு அப்புறப்படுத்தப்படும் போது கிழக்கணையாக உள்ள மூன்று தூண்களும் ஆட்டம் கண்டது. மேற்படி தூண்களின் கம்பிகளும் மேல்மட்டத்திலிருந்து துண்டிக்கப்பட்டது. மேற்படி நுழைவு வாயில் அமைப்பதற்கு கட்டுமான பணிகளை மேற்கொண்ட திரு.கிளீட்டஸ் என்பவருக்கு நகராட்சியின் மூலம் வேலை உத்தரவு எதுவும் வழங்கப்படவில்லை. மேற்படி வேலைக்கான நிர்வாக அனுமதியோ, தொழில் நுட்ப அனுமதியோ எதுவும் பெறப்படவில்லை. அதனால் டெண்டரும் கோரப்படவில்லை. ஆபத்தான நிலையில் பேருந்து நிலையத்தின் நுழைவு வாயிலில் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறினை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கிழக்கணையாகவுள்ள மூன்று தூண்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கும், மேற்கணையாக கண்ணதாசன் சாலை முகப்பில் நின்று கொண்டிருக்கும் இரண்டு தூண்களில் நுழைவு வாயில் அமைப்பதற்கும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.543.** நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி பெற்று செயலாற்றிட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி